
September 2019

# Coastal Watch

## கடலோரப் பார்வை



# Life at Coastal Ecosystem

Coastal Watch
Monthly Coastal update from ICT
Vol. I Issue 3 September 2019

Welcome to Coastal Watch!

Coastal Watch shares the stories about Coastal life styles. Coastal Community shares their own life experiences. It is released as part of the DHAN Foundation - Earth Journalism Network Project - Internews Project titled "Voice of Vulnerable". This is the third issue of the Magazine titled "Coastal Watch".

The articles in this magazine are not written by Journalist or Expert in the Media Field. The Articles are written by Community Journalism Volunteers trained by DHAN Foundation to write articles and promote community journalism in the coastal area.

This issue carries around eight articles, which are talks about the fishermen life experience, dry fish sales as livelihood, Deep Sea fishing experience, about two the rituals at coastal temple, another article talks about coastal agriculture and marine specific livelihood like marine algae cultivation.

Keep read and reflect your feedback through letter or e-mail.

Thanks in advance for your support!

Regards

Editorial Team

Coastal Watch

## உள்ளடக்கம்

1. மீனவர்கள் வாழ்க்கை... 1

2. கணவர் இல்லை என்று சோர்ந்து விடவில்லை... 4

3. கருவாடு எங்கள் வாழ்(விற்கு)வாதாரம்...! 6

4. தனியாய் வந்தோர், துணிவை தவிர..
துணையாய் வருபவர் யாரோ... 8

5. ஆதின மழை ஐயனார் கோவில் 10

6. எங்கள் ஊர் காதலியம்மன் கோவிலுக்கும்
பெண்கள் செல்ல கூடாது என்ற ஐதிகம் உண்டு 11

7. பருவநிலை மாற்றத்திற்கான தன்னை தயார் செய்து
கொண்ட விவசாயிகளில் இவரும் ஒருவர் 12

8. எங்களை காப்பாற்றும் கடல் அன்னை 14

**DHAN Foundation**
1A, Vaidyanathapuram East
Kennet Cross Road
Madurai 625 016. Tamil Nadu, INDIA
Tel.: +91 452 2302500; Fax: 2602247
Email: dhanfoundation@dhan.org



# மீனவர்கள் வாழ்க்கை...

துர்கா *

நம் முன்னோர் நமது வாழும் சூழலை மிக தெளிவாக 5 திணைகளாக வரையறுத்துள்ளனர் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் மற்றும் பாலை என 5 திணைகளையும், அதன் வாழ்க்கை முறைகளையும் நாம் கேள்விபட்டிருக்கிறோம். ஆனால் காலபோக்கில், அந்த வாழ்க்கை முறையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன, இங்கே இந்த கட்டுரையில் நெய்தல் - கடலும் கடல் சார்ந்த மீனவர்களின் வாழ்க்கை முறை பற்றியும் பார்க்கலாம்.

கடலையும், மீனவர்களையும் பிரிக்கவே இயலாத இரண்டற கலந்த வாழ்க்கை, எத்தனை படங்களில் கேட்டாலும், எத்தனை தடவை அவர்கள் வாழ்வியல் பற்றி கேட்டாலும் புதுமையாகவே இருக்கும். இங்கே தங்களது வாழ்வியல் முறை பற்றி நம்மிடம் பகிர்ந்து கொள்கிறார் நாகை மாவட்டம் விழுந்தமாவடி கிராமத்தை சேர்ந்த திரு. அர்ஜுனன்.




தற்போது நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடலோர கிராமங்கள் என சுமார் 8 கிராமங்கள் உள்ளன. நாகப்பட்டினத்தில் துறைமுகத்தை மையமாக வைத்து அக்கரைபேட்டை, செருத்தூர், காமேஸ்வரம், விழுந்தமாவடி, வானவன்மஹாதேவி, வெல்லப்பள்ளம், நாளுவேதபதி. போன்ற கிராமங்கள் உள்ளன.

மீன் பிடிப்பில் பல வகை உண்டு, கட்டுமரத்தில் கரையோரம் மீன்பிடிப்பதும் உண்டு, ஆழ்கடலுக்கு

* துர்கா, புதுப்பள்ளி

சென்று மீன்பிடிப்பதும் உண்டு. ஆழ்கடல் மீன்பிடிப்பு என்பது எங்க தலைமுறைக்கு பழகிவிட்டது, ஆனால் எங்கள் அடுத்த தலைமுறைக்கு கொஞ்சம் கடினமாக இருக்கிறதாக உணர்கிறார்கள். ஆழ்கடல் மீன்பிடிப்பு கொஞ்சம் கடினமான பணியும் கூட, ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு சுமார் 3-4 நாட்கள் கடலுக்குள் தங்கி மீன்பிடிக்க வேண்டும், அது இந்த தலைமுறைக்கு கொஞ்சம் கடினமாக இருக்கிறது. குறைந்த பட்சம் 2 நாட்களுக்கு வீட்டிலிருந்து உணவு எடுத்து செல்வோம், அதன் பிறகு 2 நாட்களுக்கு ரொட்டி, பிஸ்கட் வைத்திருந்து ச ாப்பிடுவோம். சிலர், இங்கிருந்து ரவை அல்லது சேமியா எடுத்து சென்று உப்புமா செய்து சாப்பிடுவதும் உண்டு.



நாங்கள் கடலுக்கு செல்லும் போது செல்போன் எடுத்தச் செல்கிறோம், ஆனால் ஒரு குறிப்பிட்ட தொலைவிற்கு பிறகு எவ்வித தொலை தொடர்பும் கிடைக்காது, எங்களுக்குள் கடலுக்குள் பேச அரசாங்கம் வாக்கி டாக்கி அனுமதி கொடுத்துள்ளது, அதனை வைத்தே எங்களுக்குள் கடலிலிருக்கும் போது பேசிக் கொள்வோம். பெரும்பாலான நேரங்களில் கடலில் இருக்கும் போது நாங்கள் தூங்குவது இல்லை, எவர் ஒருவருக்கு ஆபத்து என்ற போதும் அருகில் இருக்கும் படகுகளுக்குள் வாக்கி டாக்கி மூலம் தகவல் கொடுத்து உடனடியாக உதவுவோம்.

கடலில் விபத்து என்பதும் நிகழ்வதுண்டு, படகுகள் பாறையில் மோதி அதனால் விபத்து ஏற்படுவது உண்டு. எங்களுக்கு வழிகாட்டவும், பாறைகள் இருக்கும் இடம் அறியவும், மீன்கள் எங்கு அதிகமாக கிடைக்கும் என்ற விபரங்களை அறியவும், அரசாங்கம் ஜிபிஎஸ் போன்ற கருவிகள் கொடுத்து பயிற்சிகள் கொடுத்துள்ளனர், இருப்பினும், இயற்கை பேரிடர்களுக்கு பிறகு, எங்களால் சரியாக பாறைகள் எங்கு இருக்கின்றன என்பதை கணிக்க முடியவில்லை. அதனால் விபத்துகள் நடக்கின்றன. அந்த காலகட்டங்களில் அருகில் உள்ள படகுகளில்

உள்ளவரிடத்தில் வாக்கி டாக்கியில் பேசி உதவிகள் கேட்போம். இப்போது, மற்றும் ஒரு சவால், எப்பொழுது கடல் அலைகள் அதிகமாக இருக்கும் என்பதையும், காற்றின் வேகத்தையும் கணிக்க முடியவில்லை, அதனால் சில சமயங்களில் விபத்துகள் ஏற்படுவதுண்டு, அப்போதும், சக மீனவர்கள் எங்களுக்கு உதவுவர். உடனே படகை திரும்பி எடுத்தும் வந்து விடுவோம்.

கடலில் பயணிக்கும் போது, சில நேரங்களில் கடல் அலை கண்ணில் பட்டுவிடும், உடனே கண் எரிய ஆரம்பிக்கும், எங்களை போன்ற தலைமுறையினருக்கு பழகிவிட்டது, ஆனால் இந்த தலைமறைக்கு அதுவும் கொஞ்சம் கடினமாக உள்ளது, கண் எரிச்சல் அதிகமாக வருகிறது. மேலும் கடல் அலை பட்டுக் கொண்டே இருக்கும் பட்சத்தில் உடலில் வெள்ளை நிற புள்ளிகள் ஏற்படுவதும், அரிப்பு எடுப்பதும் சகஜம், ஆனால் 2 நாட்களில் அது சரியாகிவிடும்.

முடிந்தவரை நமது நாட்டின் எல்லைக்குட்பட்ட பகுதியிலேயே மீன் பிடிக்கிறோம், சில நேரங்களில் 4 நாட்கள் தங்கி எதும் கிடைக்காத பட்சத்தில் இலங்கை நாட்டின் பார்டர்வரை போகும் வழக்கமும் உள்ளது. ஒரு 6-7 வருடங்களுக்கு முன்னால் வரை அது ஒரு பெரிய சவாலாகவும், பிரச்சனையாகவும் இருந்தது. கண்ணில் பட்டால் தாக்குதல் நடத்தினார்கள், ஆனால் அதுவும் நியாயமாகவேபட்டது, நம்ம நாட்டிற்கு அவர்கள் வந்து, நமது வலையில் உள்ள மீன்களை எடுத்து சென்றால் நாம் சும்மாவிடுவோமா, அது மாதிரி அவர்களும் தங்களது எதிர்ப்பினை காட்டினார்கள், ஆனால் தற்போது அந்த பிரச்சனை எதுவும் இல்லை. நாங்களும் பெரும்பாலும் இப்போது எல்லையை தாண்டவது இல்லை.

நாகப்பட்டிணம் பகுதியில் அதிகமாக கிடைக்கும் மீன்கள் என்று பார்த்தால் பாரா, வெலமீன், கடல்விரா, கெலுத்தி, செம்பரா, திருக்கை, அரக்கலா, மத்தி, போன்ற மீன்கள் கிடைக்கும். இந்த மாதம் கோலா மீன் கிலோ 80 ரூபாய்க்கும், செம்மர மீன் 350 ரூபாய்க்கும், திருக்கை 100 ரூபாய்க்கும், அரக்கலா 700 ரூபாய்க்கும் விற்கிறது, ஆனால் அதன் விலை ஒரே மாதிரி இருப்பதில்லை.

இப்போ கடல் விபத்துகள், உயிர் இழப்புகள் வெகுவாக குறைந்துவிட்டன. கடந்த சுனாமியின் போது தான் எங்களுக்கு புதிதாக இருந்தது. எதுவும் தெரியவில்லை உயிர் இழப்புகள் ஏராளம். ஆனால் தற்போது முன்னறிவிப்புகள் பல ஊடகங்கள் வாயிலாக வருகின்றன. அதனை கேட்டு அதன்படியே நாங்கள் கடலுக்குள் செல்கிறோம். மிகவும் கடினமான புயல், மழை அறிவிப்புகள் இருந்தால், பாதுகாப்பான இடங்களுக்கு சென்று தங்கிவிடுகிறோம். அதனால் இழப்புகள் அதிகமாக இருப்பதில்லை.

கால மாற்றங்களில், இயற்கை சூழலிலும், கடலிலும் மாற்றங்கள் பல வந்துகொண்டே இருக்கின்றன, அது போல், கடலை சார்ந்து வாழும் மீனவர் வாழ்க்கை முறையும் மாறிக் கொண்டே உள்ளது..

# கணவர் இல்லை என்று சோர்ந்து விடவில்லை...

வள்ளி *

விழுந்தமாவடி கடல் தண்ணீரில் பாதி என் கண்ணீராய் தான் இருக்கும். என் கதை கேட்கும் முன் மனதை திடப்படுத்திக்கொள்ளுங்கள் என்று சொல்ல மாட்டேன், ஏனெனில் இது மீனவ பெண்களுக்கே உரிய சொத்து. இறைவன் படைப்பில் மிகவும் வஞ்சிக்கப்பட்டது பெண் மட்டுமே. மற்றவர்களைப் போலவே இரண்டு கால், இரண்டு கை, இரண்டு கண்களோடு சேர்த்து நிறைய கண்ணீரையும் கொடுத்து விட்டார். ஒவ்வொரு பெண்ணுக்கும் திருமண வாழ்க்கையில் பல கனவுகள் இருக்கும். என் கனவுகளை எல்லாம் கனவாகவே போகும் படி விட்டுவிட்டு, திருமணமான நான்கு ஆண்டுகளில் இறந்துவிட்டார் என் கணவர்.

பெண்ணாய் நான் பிறந்து படும்பாடு போதாது என்று நான்கு பெண்குழந்தைகள் வேறு. ஒரு பெண்குழந்தைகளை கரை சேர்ப்பது எவ்வளவு போராட்டம் என்று எல்லோருக்கும் தெரியும். என் குடும்பத்திற்கு என்று சொத்தோ, வசதியோ இல்லை அன்றாடம் கடலுக்கு போய் வந்தால் மட்டுமே குடிக்க கஞ்சி என்ற நிலையில் அவரையும் இழந்த நான், இந்த நான்கு பிஞ்சு முகங்களையும் பார்த்து தான் உயிரோட வாழ நினைத்தேன். எனக்கு வீட்டை விட்டால் எதுவும் தெரியாது, எத்தனை நாள் தான் அரைவயிறு கால் வயிறுமாய் கிடப்பது.

சொந்தங்களிடம் சென்று கேட்க தன்மானம் இடம் தரவில்லை. ஏதேனும் வேலைக்கு செல்லும் அளவிற்கு படிப்பில்லை. ஒரு கைத்தொழிலும் தெரியாத நிலை. கடலன்னை மட்டுமே என் கண்ணுக்கு முன் நின்றாள். என் வீட்டக்காரரின் சொந்தக்காரர் ஒருவரின் உதவியுடன் மீன் ஏலக்கடையில் மீன் வாங்கி வீடுவீடாக கொண்டு சென்று விற்க ஆரம்பித்தேன். ஒவ்வொரு நாளிலும் சின்ன குழந்தைகளை வீட்டில் தனியே விட்டு விட்டு ஊர் ஊராய் கூடை சுமந்து மீன் விற்றேன்.

என் பெரிய பெண், என் பிள்ளைகளை பார்த்துக்கொள்ளும் இன்னொரு தாயானால், அவளுக்கு பள்ளிக்கூடத்தின் முகமே தெரியாது. ஒவ்வொறு நாளும் போராட்டமாய் கழிந்தது இந்த இளம் விதவையின் வாழ்க்கை. எங்கள் ஊர்களில் திடீரென்று மழை வரும் புயல்




* வள்ளி, விழுந்தமாவடி, நாகை

அடிக்கும் வாங்கிய மீனெல்லாம் கருவாடு கூட போட முடியாமல் அழுகிபோகும். அன்று என் குழந்தைகளின் வயிறு காய்ந்துபோகும். விஷேச காலங்களில் எல்லோருக்கும் சந்தோசம் எனக்கு மட்டும் வருத்தம் அன்று மீன் விக்காதோ என்று.

எங்க ஊர்கள்ல ஒரு பழமொழி இருக்கு பொண்ணு வளர்றதும் புடலங்கொடி வளர்றதும் தெறியாதும்பாக, இவ்வளவு போரட்டங்களுக்கு இடையே என் பெண்ணுக வளர்ந்து நின்னாங்க. அதுக வளர வளர எனக்கும் கவலையும் பயமும் சேர்ந்து வளர்ந்துச்சு, கடற்கரையிலே இருந்தும் எப்படி பெண்களை கரைசேர்க்க போறேனோனு. நாளும் கிழமையும் அது பாட்டுக்கு ஓடிக்கிட்டே தான் இருந்துச்சு, என் பொழப்பு அப்படியே தான் இருந்துச்சு, பெரிய பொண்ணை நிறைய இடத்தில் இருந்து கேட்டு வந்தார்கள். நான் என்ன செய்வேன் இருக்குற காலத்துல ஒரு அச்சு பவுனுகூட போடலைனா எவன் கட்டுவான். என் குடும்ப சூழல் தெரிந்து வந்தவருக்கு மணமுடித்து கொடுத்தேன்.

அடுத்தடுத்து வளர்ந்து நின்ற பொண்ணுகள வச்சுக்கிட்டு இருக்கக் கூடாதுனு ஒவ்வொன்றாய் கரைசேர்த்தேன். என் பிள்ளைகளை படிக்க வைக்க முடியாவிட்டாலும் நல்ல முறையில் வளர்த்து யாரும் ஒரு குறையும் சொல்லாத மாதிரி திருமணமும் செய்து வைத்து விட்டேன். இப்போது என்னுடன் என் கடைக்குட்டி மட்டும் இருக்கிறாள். பண்ணிரெண்டாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் அவளையாவது நல்லமுறையில் படிக்க வைக்க வேண்டும் என்பதே இப்போது என் கனவு. வாழ்க்கையில் பல போராட்டங்களை பார்த்த பிறகும் போராடும் குணம் தானாகவே வளர்ந்து விடுகிறது.





# கருவாடு எங்கள் வாழ்(விற்கு)வாதாரம்...!

அரிபிரியா *

என் பெயர் மீனாட்சி. நாங்கள் நாகப்பட்டிணம் மாவட்டம் வெள்ளப்பள்ளம் கிராமத்தை சேர்ந்தவர்கள். நான் முப்பது வருடங்களாக கருவாடு தயார் செய்து விற்று வருகிறேன். ஆரம்பத்தில் என் கணவர் மீன்பிடித் தொழில் செய்து வந்தார். எங்களுக்கென்று சொந்தமாக படகு எதுவும் இல்லை, அக்கம்பக்கத்தில் உள்ளவர்களுடன் கடலுக்கு கட்டுமரத்தில் மீன் பிடிக்க செல்வார் எனது கணவர். அவர் மீன்பிடித்து விற்றது போக மீதமுள்ள மீன்களை நான் சுத்தம் செய்து கிழித்து உப்பு தடவி காய வைத்து கருவாடாக வீட்டிற்கு மட்டுமே பயன்படுத்தி வந்தேன். அத்தருணத்தில் வருமானம் போதுமானதாகவும் இல்லை. சில நேரங்களில் நிறைய மீன்கள் மீதம்பட அவற்றையெல்லாம் கருவாடாக தயார் செய்து முதலில் நானே சென்று வீடுவீடாக விற்கத் தொடங்கினேன். என்னுடைய கருவாடு சுத்தமாகவும், நன்கு உலர்ந்தும் இருப்பதால் என்னிடம் நிறைய மக்கள் கருவாடு வாங்குவார்கள். தங்களது ஊருக்கு, தெருவிற்கு எனது வரவை எதிர்பார்த்து, என்னிடம் விரும்பி கருவாடு வாங்கும் நபர்கள் அதிகரிக்க துவங்கினர். கருவாட்டிலும் மக்கள் சுத்தம் எதிர்பார்க்கிறார்கள் என்பதை உணர்ந்த நான், எனது கருவாட்டு

* **அரிபிரியா**, வேட்டைகாரனிருப்பு

வியாபாரத்தில் சுத்தமான கருவாட்டை முன்னிறுத்தி, விற்பனை செய்ய துவங்கினேன். கருவாடு விற்பனை அதிகரிப்பதை பார்த்த எனது கணவரும் மீன் விற்பனையை விட்டுவிட்டு என்னுடன் இணைந்து கருவாட்டுத் தொழிலையே பெரியளவில் செய்து வருகிறார். சிறிய மீன்களில் ஆரம்பித்து, பெரிய மீன்களையும் வாங்கி கருவாடு போட்டு விற்க ஆரம்பித்தோம். சிறிய மீன்களை கிழித்து காய வைத்தால் போதும். ஆனால் பெரிய மீன்களை துண்டு துண்டாக வெட்டி அதிகளவில் உப்பு தடவி நன்றாக காயவைத்து பிறகு விற்பனைக்கு எடுத்து செல்லவேண்டும், காயவைப்பதற்கு தான் மிகவும் கடினமாக இருக்கும். அதிக உப்பு சேர்க்கப்பட வேண்டும் அப்பொழுது தான் கருவாடு வீணாகாமல் இருக்கும். நான் தினந்தோறும் விற்பனைக்காக 20 கி.மீ பயணம் செய்கிறேன்.

முன்பெல்லாம் நேரடியாக, ஊர் ஊராக சென்று விற்பனை செய்வேன். அதற்கு அடுத்தபடியாக, தற்போது கடைகளுக்கும் பாக்கெட் போட்டு விற்பனை செய்கிறோம். எங்களை பார்த்து பல குடும்பங்கள் கருவாடு விற்பனையில் ஈடுபட துவங்கினர். தற்போது கடுமையான போட்டிகள் இருந்தபோதும், எங்களது விற்பனையில் 10 ருபாய் முதல், சிறிய பாக்கெட் ஆரம்பித்து, தேவையான அளிவில் பாக்கெட் செய்து விற்பனை செய்வதால் எங்களிடம் நிறைய மக்கள் கருவாடு வாங்குகிறார்கள். எல்லா தொழிலும் போட்டியிருக்க தான் செய்யும் என்ற போதிலும் தரமும், கால மாற்றத்திற்கேற்ப எங்களது தொழிலை மேம்படுத்திக் கொண்டமையால், எங்களது தொழிலில் நாங்களே முதன்மையாக இருக்கிறோம்.

விவசாயம் போன்ற பல வாழ்வாதரங்களுக்கு மழையே ஆதாரமாக உள்ளது. பொதுவாக மக்கள் மழை வேண்டி பிரார்த்தனை செய்வார்கள், ஆனால் மழை எங்களது வாழ்வாதரத்திற்கு தடையாக உள்ளது. ஆம், மழைக்காலங்களில் எங்களால் கருவாடு போட முடியாது. அந்நேரங்களில் மட்டும் எங்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கும். மற்ற நேரங்களில் நாங்கள் எங்கள் இத்தொழிலை தொடந்து வெற்றிகரமாக செய்து வருகிறோம்.



# தனியாய் வந்தோர், துணிவை தவிர.. துணையாய் வருபவர் யாரோ...

அரிபிரியா *

என் பெயர் விஜயலெட்மி. தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் ஒன்றான நாகப்பட்டிணம் மாவட்டத்தின் விழுந்தமாவடி கிராமத்தை சேர்ந்தவர். என் கணவர் கட்டுமர படகு வைத்திருக்கிறார். தினமும் அவர் விடியற்காலை 4 மணிக்கு கடலுக்குள் மீன்பிடிக்க சென்று விட்டு காலை 10 மணிக்கு கரைக்கு வந்திடுவார். அந்த மாதிரி செல்லும் போது, மத்தி, பொறுவா போன்ற சின்ன மீன்கள் மட்டுமே கிடைக்கும்;. அதனை கொண்டு பெரிய வியாபாரம் செய்யவோ, அதிக வருமானம் ஈட்டவோ இயலாது, அன்றாட தேவைக்கான வருமானம் கிடைப்பதே கடினமாக இருக்கும், அந்நேரங்களில் எனது கணவர் ஆபத்துகள் அதிகம் என்று தெரிந்தும், ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு பெரிய மீன்களை பிடிக்க பிற நண்பர்களுடன் செல்வார். அது போன்ற சமயங்களில் என் மனது, ஆபத்தை எண்ணி வேண்டாம் என்று சொல்ல தோன்றும், எனினும் குடும்ப சூழலை கருதி, இறைவனை அனுதினமும் வேண்டி, ஆழ்கடல் மீன்பிடிக்கு அனுப்புகிறோம். அந்த மாதிரி ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு சென்றுவர இரண்டிலிருந்து மூன்று நாட்கள் ஆகும். ஆழ்கடல் மீன்பிடிப்பில் சுறா, முள்ளுவாலை, கானாங்கெளுத்தி, பாறை போன்ற மீன்கள் கிடைக்கும். அவர்கள் கிளம்பியதிலிருந்து, வீடு திரும்பி வரும்வரை எனக்கு மிகவும் பயமா இருக்கும். எங்கள் வீட்டில் நாங்கள் யாரும் நிம்மதியாக தூங்கவோ, சாப்பிடவோ இயலாது. சுமார் 5 வருடத்திற்கு முன், ஒரு முறை எனது கணவர், கடலுக்கு சென்று மூன்று நாட்களாகியும் வீட்டிற்கு வரவில்லை, போனிலும் தொடர்பு கொள்ள இயலவில்லை. எங்கள் வீட்டில் நாங்கள் அனைவரும் மிகவும் பயந்து விட்டோம். அப்பொழுது, எனக்கு இரண்டாவது குழந்தை பிறந்து இரண்டு மாதங்கள் மட்டுமே ஆகியிருந்தது. என்னால் நிம்மதியாக சாப்பிடவும் முடியவில்லை, குழந்தையை பார்த்துக் கொள்ளவும் முடியவில்லை. எனது செல்போனை தலைக்கு பக்கத்தில் வைத்துக் கொண்டே தூங்குவேன். அருகில் எங்கேயாவது போன் அடித்தால் கூட, உடனே எழுந்து எனது போனை எடுத்து பார்ப்பேன். ஆனால் அவருக்கு எதுவும் நடந்திருக்காது என்பதை மட்டும் எனது மனது சொல்லிக் கொண்டே இருந்தது. அனுதினமும் இறைவனை வேண்டிக் கொண்டே இருந்தேன். கிட்டத்தட்ட ஒரு வாரம் கழித்து, திடிரென்று வேறு ஒரு புதிய நம்பரில் இருந்து ஒரு போன் வந்தது. அந்த போனில் எனது கணவர் ஹலோ என்று சொன்ன உடனே

*அரிபிரியா, வேட்டைகாரனிருப்பு

அவரது குரலை கண்டுபிடித்து விட்டேன், ஆனால் என்னால் பதில் எதுவும் பேச முடியவில்லை, அழுகை எனது குரலை அடைத்தது. அதற்குள் அவர் பல முறை ஹலோ என்று சொல்லி விஜி என்று எனது பெயரை சொல்லி கூப்பிட்டார். ஆழ்கடல் பகுதிக்கு சென்றதால், தவறுதலாக அடுத்த நாட்டு எல்லைக்குள் சென்று விட்டதாகவும், அப்போது ஏற்பட்ட விபத்தில் கையில் வெட்டுக்காயம் அடைந்ததாகவும், 2 நாட்கள் அங்கு இருந்ததாகவும் தான் தற்போது நன்றாக இருப்பதாகவும், திரும்பி வந்து கொண்டிருப்பதாகவும் கூறினார். அந்த நாளை என்னால் எனது வாழ்வில் மறக்கவே இயலாது, இப்போது நினைத்தாலும் எனது கண்கள் கலங்கிவிடும். இருந்தாலும் கரைக்கு திரம்பி வரும்வரை நான் நிம்மதியாகவே இல்லை. எனது கணவர் வீட்டிற்கு வந்த பிறகு தான் நிம்மதியானோம். என்ன செய்வது? சிறு மீன்கள் பிடித்தால் படகிற்கு ஆகும் செலவிற்கும் பிடித்த மீனிற்கும் கட்டுபடியாகாது. அதனால் தான் ஆழ்கடல் மீன்பிடிக்கு ஆபத்து இருக்கிறது என்று தெரிந்தும் மீன்பிடிப்பிற்கு செல்கிறார்கள். அவர்களுக்கு, தனியாய் வந்தோர், துணிவை தவிர.. துணையாய் வருபவர் யாரோ.. என்று எங்கள் வாழ்க்கை கடலுடன் ஓடிக்கொண்டிருக்கிறது.





# ஆதின மழை ஐயனார் கோவில்




என்ன அய்யனார் கோவிலுக்கு ஊரின் பெயரைவைக்காமல், ஏதோ ஆதின மழை அய்யனார் என்று பெயர் இருக்கே என்று பார்க்கிறீர்களா? ஆம் நாகப்பட்டிணம் மாவட்டத்தின் வேட்டைகாரனிருப்பு கிராமத்தின் மிகப் பழமையான கோவிலான அய்யனார் கோவிலுக்கு தான் ஆதின மழை அய்யனார் கோவில் என்று பெயர்.

வருடத்திற்கு ஒருமுறை இக்கோயில் சித்திரை மாதத்தில் ஒரு திருவிழா நடைபெறுகிறது. அத்திருவிழாவானது மழை வேண்டி நடைபெறும் திருவிழா. அக்கோயிலின் பங்காளிகள் அனைவரும் ஒன்றுசேர்ந்து அத்திருவிழாவை அரங்கேற்றுவர். திருவிழா அன்று, காலையில் கோவிலை சுத்தம் செய்து, அதன் துணைச் சாமிகளான முனீஸ்வரர், கழுவுடையான், முன்னிடையன் ஆகிய சுவாமி சிலைகளுக்கும் அபிஷேகம் செய்வர். பிறகு மாலையில் கோயில் மருளாளிகள் அனைவரும் சேர்ந்து, மழை வேண்டி அய்யனார்சுவாமிக்கு அபிஷேகம் செய்வார்கள். அனைத்து வருடங்களும் இரவில் ஏதாவது ஒரு கலை நிகழ்ச்சியை அரங்கேற்றுவர். அந்நிகழ்ச்சி ஆரம்பித்து நடந்து கொண்டிருக்கும் போதே மழை வந்து விடும். இது நம்பிக்கை மட்டுமல்ல வருடா வருடம் நடைபெறும் இயல்பு. ஒருமுறை கூட நடைபெறும் கலை நிகழ்ச்சிகள் முழுமையாக நடைபெற்றது கிடையாது. கண்டிப்பாக மழை வந்து விடும். அதனாலேயே இக்கோவிலுக்கு ஆதின மழை அய்யனார் என்ற பெயர் வந்தது.

*ரவிதா, வேட்டைகாரனிருப்பு

# எங்கள் ஊர் காதலியம்மன் கோவிலுக்கும் பெண்கள் செல்ல கூடாது என்ற ஐதிகம் உண்டு

காவியா *



தமிழ்நாட்டின் கடலோர மாவட்டமான நாகபட்டினம் மாவட்டத்தின், ஓர் கடலோர கிராமம் வேட்டைகாரனிருப்பு, எங்கள் கிராமத்தின் எல்லையில் உள்ளது காதலியம்மன் கோவில். என்ன கோவிலின் பெயரே.. ''காதலியம்மன் கோவில்'' என்று வித்தியாசமாக இருக்கிறது என்று பார்க்கிறீர்களா? இங்குள்ள நம்பிக்கையும், பின்பற்றுதலும் மிகவும் வித்தியாசமாகவே இருக்கிறது.

முன்னொரு காலத்தில் பெண் ஒருத்தி வாழ்ந்து வந்தாள். அவள் தன்னுடைய வீட்டை விட்டு வெளியிலேயே சென்றதில்லை, செல்ல அனுமதியுமில்லை. அவள் தன்னுடைய 16 வயது வரை ஆண்களையே பார்த்ததே இல்லை. அவள் வீட்டிலிருந்து வெளியில் வரும் நிலைமை ஏற்பட்டபோது அவள் பல ஆண்களைப் பார்த்தாள். அவர்கள் மீது அவளுக்கு காதல் ஏற்பட்டது. அப்பொழுது முதல் அவள் ஆண்களை விரும்ப ஆரம்பித்தாள். அதற்கு மாறாக பெண்களை வெறுத்து ஒதுக்கினாள். ஆனால் அவள் எந்த ஒரு ஆணையும் திருமணம் செய்து கொள்ளவில்லை. அதற்கு முன்னாகவே தன் சிறு வயதிலேயே அம்மை நோயால் பாதிக்கப்பட்டு இறந்து விட்டாள். அவளை புதைத்த இடத்திலேயே அவளுக்கு கோயில் எழுப்பி காதலியம்மன் என்ற பெயர் வைத்து வழிபட்டனர்.

சபரிமலையில் மட்டுமல்ல, எங்களது காதலியம்மன் கோவிலிலும், பெண்கள் அனுமதிக்கப்படுவதில்லை. ஆண்கள் மட்டுமே, கோவிலின் உள்ளே சென்று வழிபட அனுமதி உண்டு. பெண்கள் யாரும் அக்கோவிலுக்குள் சென்று வழிபட அனுமதியில்லை. சபரிமலையில் அய்யப்பன் பிரம்மசாரியாக இருப்பதால், பெண்கள் அனுமதிப்பதில்லை என்ற ஐதிகம் உள்ளது, ஆனால் இங்கு காதலியம்மன் ஒரு பெண் கன்னி தெய்வமாக இருந்தாலும், அவர் வீட்டை விட்டு வெளியில் வந்து சில நாட்கள் மட்டுமே உயிர் வாழ்ந்த காலத்தில் பெண்களை வெறுத்ததாக நம்பிக்கை, ஐதிகம் உள்ளதால், பெண்கள் இக்கோவிலுக்கு சென்று வழிபட இல்லை.

* **காவியா**, வேட்டைகாரனிருப்பு

# பருவநிலை மாற்றத்திற்கான தன்னை தயார் செய்து கொண்ட விவசாயிகளில் இவரும் ஒருவர்

* ரவிதா, வேட்டைகாரனிருப்பு

மாறிவரும் பருவநிலையில் விவசாயம் செய்ய இயலாமல், விவசாய தொழிலைவிட்டு வேறு தொழிலுக்கு செல்லும் விவசாயிகள் பலர், ஆனால், மாறிவரும் பருவநிலைக்கு தங்களை தயார் செய்து தொடர்ந்து விவசாய தொழிலை வெற்றிகரமாக செய்யும் விவசாயிகள் பலரும் இருக்கத்தான் செய்கின்றனர். அத்தகைய விவசாயிகளில் ஒருவர் நடராஜன், வயது 55. இவரது ஊர் தமிழ்நாட்டின் கடலோர மாவட்டமான நாகப்பட்டிணம் மாவட்டத்தின் விழுந்தமாவடி கிராமத்தை சேர்ந்தவர். இவர் கடந்த 35 வருடமாக விவசாயம் செய்து வருகிறார். 10 ஏக்கர் நிலம் வைத்திருக்கிறார். இவர் தனது நிலத்தை எந்த சூழ்நிலையிலும் சும்மா போட்டு வைப்பது கிடையாது, மாறிவரும் பருவத்திற்கேற்ப அதற்கேற்ப ஏதேனும் பயிர் சாகுபடி செய்து வருகிறார்.

ஆடி பட்டம் தேடி விதைக்க நினைத்தாலும், சரியான நேரத்தில் மழை இல்லாத காரணத்தால், சிறிது தாமதமாக ஆவணி மாதம் நெல் விதைக்கிறார். நெல் விதைப்பதற்கு முன் ஆடி மாதத்தில் குறைந்த பட்சம் மூன்று முறை ஏர் உழுது நிலத்தை தயார் செய்கிறார். நிலத்தில் உப்பு நிரிலும் அதிக மகசூல் தரும் நெல் விதை இரகங்களையே இவர் தேர்வு செய்து விதைக்கிறார். நாற்றாங்களில் சுமார் 10 நாட்கள் நாற்று நல்ல உயரம் வரும் வரை வைத்திருக்கிறார். அதன் பிறகு வயலில் நடுகிறார். அதன்பிறகு நெல் விளைய தேவையான உரம் இடுகிறார். தனது நிலத்திற்கு ஏற்றவாறு 3-4 தடவை தண்ணீர் பாய்த்துகிறார். கார்த்திகை மாதம் அறுவடை செய்கிறார். அவர் எதிர்பார்க்கும் அறுவடை செய்கிறார். இடையில் பயிர் பாதுகாப்பிற்கு தேவையான ஆலோசனைகளை உரிய துறைசார்



வல்லுனர்களை தொடர்பு கொண்டு உரிய நேரத்தில் பெற்று பயிர்களை பாதுகாத்து பயனடைகிறார். அதனை தொடர்ச்சியாக, உடனடியாக, மழைகாலத்திற்கு பிறகு அறுவடைக்கு உரியதாக இருக்கும் சியார் நெல் இரகங்களை விதைக்கிறார். தனது நிலத்திற்கு சியார் நெல் விதைக்க சுமார் மூன்று வெளிநபர்களை வேலைக்கு ஈடுபடுத்துகிறார். அதனை தொடர்ந்து நடவு நட சுமார் 10 நபர்களை ஈடுபடுத்தி அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறார். அதன் உற்பத்திக்கு தேவையான உரங்களையும் சரியான நேரத்தில் பயன்படுத்துகிறார். இதன் அறுவடை பயனை தை மாதத்தின் இறுதியில் பெறுகிறார்.

மாசி மாதத்தில் மறுமுறை ஒரு தடவை நிலத்தை உழுகிறார். அதனை தொடர்ந்து, எள், உளுந்து போன்ற குறைந்த அளவே நீர் தேவைப்படும் குறுகிய கால பயிர்களை சாகுபடி செய்து வருகிறார். அறுவடைக்கு பின் அப்பயிர்களின் கழிவுகள், அடுத்த பருவத்திற்கு உரமாகின்றன.

நாகப்பட்டிணம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு கஜா புயலின் கோர தாண்டவத்தில், தென்னை மர விவசாயிகள் மட்டுமின்றி, அனைத்து விவசாயிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது இவரது வாதம், கஜா புயலின் போது சுனாமிக்கு பிறகு சில கடலோர கிராமங்களில் கடல் நீர் கிராமத்தின் விவசாய நிலங்களில் புகுந்து விட்டமையும், இன்றளவும் நிலத்தின் உப்பளவு அதிகமாக உள்ளதும் விவசாயத்திற்கு சவாலாகவும், தடையாகவும் இருக்கிறது என்கிறார் திரு.நடராஜன்.

விவசாயம் இவருக்கு ஓர் வேட்கை. தன்னை ஒரு முழு நேர விவசாயி என்று சொல்லிக் கொள்வதில் இவர் மிகவும் பெருமைபடுகிறார். தனது அடுத்த தலைமுறையும் விவசாயமே செய்ய வேண்டும் என்ற வேட்கையும் இவருக்கு உண்டு.





# எங்களை காப்பாற்றும் கடல் அன்னை

ஒவ்வொரு ஆண்டும் பூமியின் வெப்பநிலை அதிகரித்து வருவதால், துருவப்பகுதிகளில் உள்ள பனிக்கட்டி ஏரிகள் கரைந்து கடலின் நீர்மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருவதாகப் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதனைத்தான் உலக வெப்பமயமாதல் என்கிறோம். சூடாகிக் கொண்டிருக்கும் இப்பூவுலகு கடற்கரையோர நாடுகளை கொஞ்சம் கொஞ்சமாக மூழ்கடித்து வருகிறது. இதற்கிடையே கடலின் நடுவே இருக்கும் பல்வேறு தீவுகளும் மூழ்கத்தொடங்கியிருக்கின்றன. பருவநிலையில் நிகழும் மாற்றங்களின் காரணமாக நினைத்துப் பார்க்க இயலாத பல்வேறு சுற்றுச்சூழல் பேரிடர்களை நாம் தற்போது எதிர்கொண்டு வருகிறோம்.

உலகிலுள்ள தீவு நாடுகளும், நாடுகளுக்குள் உள்ள தீவுப்பகுதிகளும் சந்தித்து வரும் சூழலியல் பிரச்சனைகள் ஏராளம். அவற்றைக் காப்பதற்காக உலக அளவில் பல்வேறு நாடுகளும், அமைப்புகளும் தொடர்ந்து முயற்சி மேற்கொண்டிருக்கின்றன. தீவுகளைக் காக்க வேண்டும் என்ற குரல் உலகம் முழுவதும் ஓங்கி ஒலிக்கத் தொடங்கியிருக்கும் வேளையில்தான், 2015ஆம் ஆண்டிற்கான தீவுப் பாதுகாவலராக தமிழகத்தை சேர்ந்த ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். அதுவும் அவர் ஒரு பெண் எனும்போது நமக்கெல்லாம் பெருமைதான்.

கடற்பகுதிகளில் இயற்கையாக விளைந்துகிடக்கும் பாசிகளைச் சேகரிப்பதுதான் சரஸ்வதியின் பணி. விழுந்தமாவடி கிராமத்திலுள்ள பெண்களை ஒருங்கிணைத்து இயற்கையாய் விளைந்த பாசி எடுக்கும் தொழிலை மேற்கொண்டு வருகிறார். 'எங்க கிராமம் மட்டுமல்லாம ஏறக்குறைய 15 கிராமங்கள்ல இத்தொழிலைச் செய்யுறாங்க. முன்னாடி ஊருக்கு முப்பது, நாப்பது குடும்பங்கதான் பாசித்தொழில நம்பி இருந்துச்சு. இன்னைக்கி குடும்பங்க பெருகிப்போனதுனால எண்ணிக்கையும் அதிகமாயிருச்சு. மாசத்துல எல்லா நாளும் கடலுக்குப் போய்க்கிட்டிருந்த நாங்க, கடலோட வளம் பாதிக்கப்படும்னு, மாசத்துக்கு பன்னெண்டு நாளு மட்டும்தான் இப்ப கடலுக்குப் பாசியெடுக்கப் போறோம்' என்றார்.

கடல் பாசிகளைச் சேகரிக்கும் பணியைச் செய்யும் பெண்கள் அதிகாலையில் 5 மணிக்கே மோட்டார் பொருத்தப்பட்ட வல்லத்தில் அல்லது துடுப்புப் போடும் வத்தையில் பயணம் மேற்கொண்டு அருகே உள்ள தீவுகளுக்கிடையே மூழ்கி நீச்சலடித்துச் சென்று பாசிகளைச் சேகரிக்கின்றனர். பிறகு பிற்பகல் 4 மணிக்குக் கரை திரும்பி சேகரித்த பாசிகளையெல்லாம் உலர்த்தி வியாபாரிகளிடம் கொடுத்து அன்றைய மார்க்கெட் நிலவரப்படி பணம் பெற்றுக்கொள்கின்றனர்.

* **ராதிகா**, பூவைத்தேடி



‘ஏழ்மைப்பட்ட மீனவக்குடும்பங்கறதுனால பத்து வயசுலேயே அப்பாகூட கடலுக்குப் போனேன். அவரு கடலுக்குப் போகாத நேரங்கள்ல எங்க அம்மாகூட நானும் பாசி எடுக்கப் போயிடுவேன். அப்ப இருந்தே நான் கத்துக்கிட்ட தொழில்ங்கறதுனால, எனக்கு இந்த தொழில் மேலயும், கடல் வளங்கள் மேலயும் கூடுதல் கவனமும், அக்கறையும் ஏற்படத் தொடங்கிருச்சு. அதனால, கடலுக்குக் கேடு தர்ற எந்த விசயங்களையும் செய்ய நாங்க ஒருபோதும் அனுமதிக்கிறதில்ல’ என்கிறார் லட்சுமி தீர்க்கமாக.

தனது கணவர் கொடுத்த ஊக்கத்தின் பேரில் மகளிர் குழு ஒன்றில் இணைந்து சரஸ்வதி சேமிக்கத் தொடங்கினார். சேமிப்பு என்னவோ வெறும் இருபது ரூபாயில் தொடங்கினாலும், பிறகு ஐம்பது, நூறு என்று அதிகரித்தபோதும், ஏழைப் பெண்களை ஒருங்கிணைக்கும் ஆர்வமும், வழிகாட்டும் திறமையும், துணிச்சலான பேச்சாற்றலும் சரஸ்வதியை தலைமைப் பொறுப்பிற்கு உயர்த்தின. இதனால் காலப்போக்கில் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினராக உயர்ந்தார். தனது ஊரிலுள்ள ஏழைப் பெண்களுக்காக, அவர்களின் மேம்பாட்டிற்காக உழைத்துக் கொண்டிருக்கும் சரஸ்வதி, எளிய மக்களின் நம்பிக்கைக்குரிய பெண்மணியாகத் திகழ்கிறார்.

‘கடல்ல பாசியெடுக்குற தொழில்ங்கறது நீங்க நெனக்கிற மாதிரி அவ்வளவு லேசு இல்லைங்க. கடலுக்குள்ள இருக்கற விசப்பூச்சிகள் குறிப்பா பாம்பு, அஞ்சாலை, சாமிமீன், தும்பி, முள்ளம்பேத்தை, திருக்கை, ஆக்கு இதெல்லாம் ரொம்ப ஆபத்தானது. அதிகபட்ச கவனம் இருந்தாத்தான் இதுககிட்டருந்து தப்பிக்க முடியும். ஒரு தீவுலருந்து இன்னொரு தீவுக்கு மூழ்கியே பாசி எடுக்கப்போறதுனால 20 அடி ஆழத்துக்கும் மேல

நாங்க முங்கிப் போறதுக்கு உடம்புல வலு வேணும். இதையெல்லாம் தாண்டித்தான் எங்க கடல் தெய்வம் எங்கள நல்லா வாழவைக்குது. அதனால, கடல் வளங்கள சுரண்டுறதுக்கு நாங்க யாரையும் அனுமதிக்கிறது இல்ல’ என்று சொல்லி கடலைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிடுகிறார்.

கடலிலிருந்து இயற்கை முறையில் எடுக்கப்படும் பாசிகள் பெரும்பாலும் உணவு, மருந்து, உரம், நிறமேற்றுதல் போன்றவற்றிற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. மரிக்கொழுந்து, கஞ்சிப்பாசி, கட்டாங்கோரை, கருக்கன்பாசி, வேர்ப்பாசி என ஐந்து வகையான பாசிகள் சேகரிக்கப்படுகின்றன. ‘மீன்பிடித் தடைக்காலங்கள்ல எப்படி மீனவர்கள் கடலுக்குப் போகாம மீன் உற்பத்திக்கு வழிகாட்டுறாங்களோ, அது மாதிரி நாங்களும் ஏப்ரல், மே மாதங்கள்ல 60 நாளைக்கி கடலுக்குப் போகமாட்டோம். ஏன்னா, அப்பதான் கடல்பாசியும் நல்லா வளர்ற பருவம். அக்குறிப்பிட்ட நாட்கள்ல மீனவர்களுக்கு அரசோட உதவி கெடைக்குது. ஆனால், கடலுக்குப் போகாத காலங்கள்ல அரசாங்கம் எங்களுக்கும் ஏதாவது உதவி செஞ்சா நல்லாருக்கும்‘ என்கிறார் சரஸ்வதி.

தன்னுடைய உழைப்பும், வியர்வையும் தன்னைச் சார்ந்த மீனவக் குடும்பப் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் சென்று சேர வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறை காட்டுகிறார்.

வழிவழியாய் கடல் வளங்களைப் பாதுகாத்தும், தனது வாழ்க்கைக்குத் தேவையானவற்றை மட்டும் சேகரித்து விற்பனை செய்தும் வாழ்ந்து வருகின்ற இந்தக் கடல்சார் பழங்குடி மக்களின் வேண்டுகோள் நியாயமானதே. தமிழ்நாட்டிலுள்ள தீவு சார் கடல்வளத்தைப் பாதுகாப்பதில் உள்ளபடியே அக்கறை காட்டி இயங்கி வரும் சரஸ்வதி போன்ற பெண்களை ஊக்குவிப்பதும், அவர்தம் வேண்டுகோளுக்குச் செவி சாய்ப்பதும் அரசின் பொறுப்பு மட்டுமல்ல... நம் ஒவ்வொருவரின் கடமையும்கூட.





## தானம் அறக்கட்டளை

தானம் அறக்கட்டளை வறுமையை அகற்ற மக்கள் இயக்கங்களை உருவாக்கி, அவற்றை ஜனநாயக அடிப்படையில் செயல்பட வைக்கும் ஒரு நிறுவனமாகும். இந்நிறுவனம் 1997 அக்டோபர் 2 முதல் செயலாற்றி வருகிறது. ஆர்வமுள்ள படித்த இளைஞர்களை ஏழை மக்களின் வளர்ச்சித் திட்டங்களில் பணியாற்றச் செய்வதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படச் செய்வதே தானம் அறக்கட்டளையின் முக்கிய நோக்கமாகும்.

மக்கள் நிறுவனங்களை உருவாக்கி அவற்றின் மூலம் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களின் மூலம் ஏழ்மையை அகற்றும் நோக்கில் களஞ்சியம், வயலகம், மானாவாரி விவசாயம், தகவலகம், கடற்புற வாழ்வாதாரம், பஞ்சாயத்து போன்ற அமைப்புகளின் வாயிலாக பல்வேறு வளர்ச்சிப் பணிகளை செய்துவருகிறது. கடந்த பதினெட்டு ஆண்டுகளுக்கும் மேலாக அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுடன் இணைந்து 14 மாநிலங்களில் 17 இலட்சம் மக்களுடன் மேம்பாட்டுப் பணிகளை முன்னெடுத்து வருகிறது.

## DHAN Foundation

DHAN Foundation is a development Organization working towards significant changes in the lives of the poor through innovative themes. It has been promoted with the objective of bringing highly motivated and educated young women and men to the development sector to work with the poor at grassroots. DHAN Foundation has come out with two scalable models Kalanjiam model of Micro Finance and Vayalagam model of Tank based watershed development. It is working on developing models on other programmes viz Tata Dhan Academy, Rainfed, Panchayat, ICT for poor. The new themes on Climate Change and Adaptation, Migration and Development, Youth and Development are on piloting in evolving models. The centres of DHAN Foundation play a vital role in integrating different programmes and themes across, in nurturing and processing the culture of collegiality, mutuality and solidarity.

மேலும் தொடர்புக்கு

**தானம் அறக்கட்டளை**
1ஏ, வைத்தியநாதபுரம் கிழக்கு, கென்னட் குறுக்குத் தெரு
மதுரை 625 016. தமிழ்நாடு
தொலைபேசி: +91 452 2302500, தொலைநகல்: +91 452 2602247
மின்னஞ்சல்: dhanfoundation@dhan.org, இணையதளம்: www.dhan.org